ஆலமர கிளையில் இங்கு ஏணை ஒன்று ஆடுது
அந்தரிக்கும் பறவை ஒன்று சோக இசை பாடுது
பாலமுதல் வாயெடுத்து பாடு புது பாட்டு 2
என் பல்லவிக்கு சரணங்களை நீயெழுதிக்காட்டு
கோணமலை ஆண்ட குழல் போட்டனது பேரனே
கோயில் எல்லாம் தவமிருந்து பெற்றெடுத்த வீரனே

பெற்றெடுத்த தாயுனது பூ முகத்தை பார்த்ததில்லை
பூந்தளிரே நீ பிறந்த ஊரினிற்கு போனதில்லை
நாங்கள் இங்கு மீண்டும் ஒரு வாழ்வினிற்காய் ஏங்குகிறோம்
நாதியற்று அகதி முகாம் வாசலிலே தூங்குகிறோம்

ஆலமர கிளையில் இங்கு ஏணை ஒன்று ஆடுது
அந்தரிக்கும் பறவை ஒன்று சோக இசை பாடுது

பன்குளத்து வயல்களேல்லாம் பாளடைந்து போகுது
பால் குடித்த வாய்கலெல்லாம் மீழ் குடித்து காயுது
கோணமலை பூமியிலே கோயில் மணி கேட்குமா
கொடியவர்கள் போய் விழவே வந்து புலி ஆழுமா

ஆலமர கிளையில் இங்கு ஏணை ஒன்று ஆடுது
அந்தரிக்கும் பறவை ஒன்று சோக இசை பாடுது

கையில் வந்த பூச்சரமே கண்திறந்து பாரடா
காவியத்து நாயகனின் போர் படையில் சேரடா
நாளை அந்த கோட்டையிலே நாங்கள் கொடியேற்றுவோம்
நாடு வரம் வேளையிலே கோணமலை ஆழுவோம்

ஆலமர கிளையில் இங்கு ஏணை ஒன்று ஆடுது
அந்தரிக்கும் பறவை ஒன்று சோக இசை பாடுது